**உடபலாத்த பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017மார்ச் 29ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016ஏப்ரல் 06ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை உடபலாத்த பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) உள்ளூராட்சிமன்ற அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,390,000 பெறுமதியான PF - 7352 ஆம் இலக்க டபள்கெப் வண்டியின் பெறுமதி மற்றும் சபைக்கு உரித்தினைக் கையளித்திராதMO-4991 மற்றும்MM-9754 ஆம் இலக்க 2 மோட்டார் சைக்கில்களின் பெறுமதி கணக்குக் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமாதன ரூபா 150,000 பெறுமதியான டேலரொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2 கணக்கு விடயங்களின் மீதி பயன்பாட்டு பட்டோலைகள் மீதியுடன் ஒப்பிட்ட போது ரூபா 97,434,636 தொகையான இணக்கமின்மை கண்டறியப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் 07கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 15,814,754 தொகையானதுடன் அதில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,418,928 ஆக காணப்பட்டது.

(ஆ) **செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,224,363 கூட்டுப்பெறுமதியான செலுத்தப்பட வேண்டிய கணக்குகளின் 02 கணக்கு மீதிகளில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 956,809 ஆக காணப்பட்டது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

2 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 23,497,881 தொகையான கொடுக்கல் வாங்கலகளை கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும்இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் பிரதேச சபை சட்டம் | |
| 49(அ) பிரிவு | பிரதேச சபைக்குரிய வீதியின் மத்தியிலிருந்து 25 அடி எல்லைக்குள் நிர்மாணங்கள் சட்டரீதியற்றது என்பதை கருதாமல் புஸ்ஸல்லாவ உப அலுவலகத்திற்கு அருகிலுள்ள குடியிருப்பாளரின் கட்டிட விண்ணப்பத்தில் 16 அடிக்கு திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் நிலையப் பரிசோதனையின் போது அக்கட்டிடம் வீதிக்கு எல்லையாக (எல்லையிலிருந்து 2 அடிக்கு குறையாத) நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி 571(3) | 2011 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 3,293,691 பெறுமதியான 126 காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| xix ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரொருவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் அரசின் வீட்டின் குடியிருந்தால் ஓய்வுபெறும் போது வீட்டை கையளிக்க வேண்டிய போதிலும் வீட்டில் குடியிருக்கும் மூன்று ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக |

| | |
|---|---|
| | நடவடிக்கை எடுத்து உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) வர்த்தமானி அறிவித்தல்

| | |
|---|---|
| 1996 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரம் | காணிகளை பிரித்து விற்பனை செய்யும் போது 1999 முதல் 2012 காலப்பகுதியில் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 27,805,000 பெறுமதியான 13 காணித் துண்டுகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் வேலி எல்லைகள் தயாரிக்கப்பட்டு காணிகளில் குடியிருக்கும் மக்களின் பொது வசதிகளுக்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன. |

(உ) சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| i. 2001 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 15/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | 47 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் சேவையில் ஈடுபட்டிருக்கும் பிரதேச சபையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நேரப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| ii. 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | கடைகளை உப குத்தகைக்கு வழங்குவது முழுமையாக தடை செய்யப்பட்டு, உப குத்தகை வழங்கும் சந்தர்ப்பத்தில் குத்தகைஉடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும், பொது வியாபாரச் சந்தையில் கடையொன்றும் வாரச்சந்தையின் கீழ் மாடியில் 5 கடைகளும் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை 2017 சனவரி 19 ஆந் திகதி மேற்கொண்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,088,171 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,594,136 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,494,035 இற்கான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரி

(அ) 2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை வீதவரி மீதி ரூபா 2,250,053தொகையானதுடன் 2016 ஆம் ஆண்டில் பட்டியலிடல் ரூபா 1,369,808 ஆக இருந்தது. இதில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 597,887 மற்றும் ரூபா 816,862 தொகைகள் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது 27 சதவீதம் மற்றும் 60 சதவீதமாக இருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலவை மீதி ரூபா 2,205,112

ஆசக இருந்தது. இதன் பிரகாரம் நிலுவை வருமான அறவீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 23 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய2 வருட காலமாக இருந்து வரும் ரூபா 110,991 ஆன நிலுவை வீத வரி மீதியொன்று காணப்பட்டது.

(இ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் வீத வரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்த நபர்களிடமிருந்து ரூபா 1,443,378 தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 5 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து வீத வரி அறவிடப்பட வேண்டிய போதிலும்சபையினால் 2005 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்படு மேற்கொள்ளப்படாமல் பழைய மதிப்பட்டினை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிற்கு வீத வரி பட்டியலிடப்பட்டிருந்தது.

### 2.2.2 குத்தகை வாடகை

#### (அ) காணி வரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை காணி வரி மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 24,048 ஆன மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நிலுவைகடை வாடகை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்கொண்டு வரப்படும் புஸ்ஸல்லாவ நகரின் 63 புதிய உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 386,658 தொகையான நிலுவை கடை வாடகை மற்றும் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டு வரப்படும் ரூபா 39,837 தொகையான தொலுவ வாராந்த சந்தையிலும் தொலுவ பொது சந்தையிலும் நிலுவை கடை வாடகை இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழுவ கடைகளை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் மாதாந்த வாடகை தாமதமாகும் மூன்றாவது மாதத்தின் போது உடன்படிக்கை இரத்தாவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 7 கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 25,200 தொகை 03 -10 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நிலுவையாக காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டில் தொலுவ வாரச் சந்தையில் கீழ் மாடி மற்றும் மேல் மாடியின் 20 கடைகள் கேள்வி கோராமல் வெளித்தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் இரட்டைப்பாதை நகரில் பொது வியாபாரச் சந்தையின் 2 கடைகள் குத்தகை கடைகள் கேள்வி கோராமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.3 ஏனைய வருமானம்

**நீர்க் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இயற்கை நீரேந்து மூலாதாரங்களிலிருந்து நீரை வழங்கும் போது சபையினால் மாதாந்தம் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து ரூபா 75 நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ந் திகதி வரையிலும் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 1,973,728 க இருந்தது. இந்நீர்க்கட்டணங்கள் நிலுவையில் தல்பிட்டிய பிரதேசத்தினதும் தொழுவ பிரதேசத்தில் செயலற்ற நர் பிரதேசங்களுக்குரிய ரூபா 847,667 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) புஸ்ஸல்லாவ அதிகாரப் பிரதேசத்தின் 2005 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 82,145 ஆன நீர்க்கட்டண நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,855,597 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,556,558தொகையும் அறவிடவேண்டியதாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,042,000 பெறுமதியான 8 அபிவிருத்தி திட்டங்கள் அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வருடம் ஆரம்பித்து 7 மாதங்கள் கடந்ததன் பின்னர் 2016 ஆகஸட் 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 8 முன்மொழிவுகள் செப்தம்பர் 24 ஆந் திகதி தலைமை அமைச்சரால் அங்கீகரித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இதில் 3 நிர்மாண வேலைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 5 நிர்மாண வேலைகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக ஆண்டில் சபை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட நிறைவேற்றப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் போதியளவில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சபையினால் ஒவ்வொரு ஆண்டிற்குரிய சுய வருமான மீட்டல் வருமானத்திலிருந்து 30 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும்,மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 77,989,801 ஆன மீண்டெழும் வருமானத்தை உழைத்திருக்கையில் அதில் அபிவிருத்தி

நடவடிக்கைகளுக்காக ரூபா 1,657,283 தொகையான 2 சதவீதம் அளவிலான குறைந்த சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் அப்பிரதேசத்திலுள்ள மக்களின் சுகதுக்கங்கள் வசதி மற்றும் நலன்புரி மற்றும் அனைத்து வசதிகளை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் பிரதேச சபையின் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் தாபிப்பதற்காக பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த முறையே ரூபா 80,000 மற்றும் ரூபா 30,000 என மொத்தம் ரூபா 110,000 தொகையான நிதிஏற்பாடுகளில் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1,525 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 250,402,460 பெறுமதியான சொத்துக்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 67,000 பெறுமதியான 4 காணிகள் இனங்காண முடியாத நிலைமையில் இருப்பதாக காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்து மெய்மையாய்வில் புதிதாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய 39 சொத்துக்கள் இனங்காணப்பபட்டிருந்த போதிலும் சபையால் இச்சொத்துக்கள் உரிய பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபை தனமொன்றாக பயன்படுத்தப்படுகின்ற கட்டிடங்களுடன் ரூபா 14,300,000 பெறுமதியான 7 காணிகளின் உரித்தை கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் வெவ்வேறு பதவிகளில் 26 வெற்றிடங்களும் 2 மிகையும் காணப்பட்டன.

(ஊ) சபைக்குச் சொந்தமான 53 மயானங்கள் மற்றும் 3 விளையாட்டரங்குகள் என்பன அமைந்துள்ள காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் சனவரி 01 ந் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற 6 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 794,835 ஆன கடன் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 621 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இக்காலப்பகுதியில் 25 அளவிலான குறைந்த அளவிலான இணக்கச் சான்றிதழ்களே வழங்கப்பட்டிருந்தமையால் அது 4 சதவதமான பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழுவ பொது வியாபாரச் சந்தையின் மேல் மாடியில் 13 கடைகள் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்படாதிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்டஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பராமரிக்கப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த இடம் வெவ்வேறு சமூக விரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு உள்ள வாய்ப்பினை தவிர்க்க முடியாதுள்ளது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் சுகாதார அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் தல்பிட்டிய மற்றும் தொழுவ புகிய 2 பிரிவுகளில் காணப்படும் 21 நீர் செயற்திட்டங்களில் நீர் சுத்திகரிக்கப்படாமல் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதாகிக்கப்பட்டது.

(ஈ) பிரதேச சபைகளைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2015 செப்தம்பர் 11 ந் திகதி மற்றும் திசெம்பர் 30 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,257,785 தொகை குறித்த செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**3.4 விளைவற்ற/ குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்**

(அ) ரூபா 102,999 பெறுமதியான கை உழவு இயந்திரமொன்றும் பெறுமதி இனங்காண முடியாத கெப் வண்டியொன்றும் 1 ஆண்டு முதல் 24 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஆ) ஒவ்வொரு பிரதேச சபையிலும் வேலைப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2014 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 596,990 பெறுமதியான 616 கல்வனைஸ் குழாய்கள் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் புஸ்ஸல்லாவ நகர மண்டபத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

ரூபா 37,796 பெறுமதியான 39 கல்வனைஸ் குழாய்கள் பற்றாக்குறையாக இருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை மூலம் நகர மற்றும் பிரதேச மட்டத்தில் 8 இடங்களில் நாளாந்தம் 3½ தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுவதுடன்அதில் புஸ்ஸல்லாவ மற்றும் இரட்டைப் பாதை பிரதசங்களின் கழிவுப்பொருட்கள் தவிர மாவத்துர தொழுவ,இலங்கஹவத்த, எகொடகழுகமுவ புபுரஸ்ஸ மற்றும் பன்விலதன்ன ஆகிய பிரதேசங்களில் ஒரு வாரத்தில் சேரும் 12 தொன்னிற்கு அண்மித்த அளவிலான கழிவுப்பொருட்கள் முகாமைத்துவமின்றி அந்தந்த பிரதேசங்களில் முறையற்ற விதத்தில் இடப்பட்டிருந்தன. அவ்வாறே புஸ்ஸல்லாவ நகரின் கழிவுகள் புஸ்ஸல்லாவ நகர மண்டபத்திற்கு அண்மையில் கழிவுப்பொருள் சேரும் இடத்தில் ஆங்காங்கே இடப்பட்டிருந்தமை அப்பிரதேசத்தின் சுற்றுப்புற சூழல் மாசடைந்து பிரதேசம் இரம்யமற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்த போது 2வருமான விடயங்களில் 69 சதவீதம் முதல் நூற்றிற்கு 90சதவீதத்தை மிகைத்தும் 9 செலவின விடயங்களில் 25 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 134(3)இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்